இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 82 - ஒலி : 310 - திருவள்ளுவர் ஆண்டு 2055 - ஆனி 06 - வியாழக்கிழமை 20 ஜூன் 2024 - மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 310 : Thiruvalluvar Year - 2055 - Aani 06 - Thursday 20 June 2024 - Madurai 8 Pages ₹ 5.00

## மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம்!

# தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் இன்று தொடங்குகிறது!

## காவல் துறை மானியத்தில் 29ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை!

சென்னை, ஜூன் 20 -

**தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் இன்று காலை கூடுகிறது. இன்று தொடங்கும் இக்கூட்டம் வரும் 29ம் தேதி வரை காலை மாலை என இரு வேளைகளிலும் நடைபெறும். இப்பேரவைக் கூட்டத்தில் வருகிற 29ஆம் தேதி அன்று காவல்துறை மானியக் கோரிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலுரை வழங்குகிறார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கூடுகிறது.

வருகிற 29ம் தேதி வரை நடைபெறும் சட்டப்பேரவை கூட்டத்தில், மானியக் கோரிக்கைகள் குறித்து விவாதம் நடத்தப்படுகிறது.

முதல் நாள் அதாவது இன்றைய கூட்டத்தில், மறைந்த விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. புகழேந்தி மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி அன்றைய தினம் பேரவை கூட்டம் ஒத்தி வைக்கப்படும்.

அதைத்தொடர்ந்து வரும் 21ம் தேதி (வெள்ளி) காலை 10 மணிக்கு சட்டப் பேரவை கூடும். காலை 10 மணிக்கு தொடங்கும் சட்டப் பேரவை நிகழ்வுகளை



காலை 9.30 மணிக்கு தொடங்குவது தொடர்பாக விதிகள் குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வரும் 21ஆம் தேதி சட்டப்பேரவை கூடிய தும் விதிகள் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஒப்புதல் பெறப்பட்டு நிறை வேற்றப்படும்.

அதையடுத்து வரும் 22ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை காலை 9.30 மணிக்கு பேரவை கூட்டம் தொடங்கும். வரும் 29ஆம் தேதி தவிர 21ஆம் தேதி முதல் 28ஆம் தேதி ஆகிய எட்டு நாட்களில் காலை, மாலை என 2 பிரிவுகளாக கூட்டம் நடைபெறுகின்றது. காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் சட்டப்பேரவை கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை மசோதா மீதான விவாதம் 8 நாள் மட்டுமே நடத்தப்படுகிறது.

**29ம் தேதி முதல்வர் பதிலுரை!**

21ஆம் தேதி (வெள்ளி) நீர்வளத்துறை, தொழிலாளர் நலன் ஆகிய துறை கள் மீது விவாதம் நடத்தப்பட்டு அந்தத் துறைகளுக் கான நிதி ஒதுக்கப்படும். அன்றைய தினம் மாலை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மீது விவாதம் நடத்தப்படும்.

22ஆம் தேதி காலை நகராட்சி நிர்வா கம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மாலை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பால்வளம்.

23ஆம் தேதி (ஞாயிறு) அரசு விடுமுறை.

24ஆம் தேதி காலை உயர் கல்வித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பள்ளிக் கல்வித் துறை, மாலை நீதி நிர்வாகம், சட்டத்துறை, செய்தி மற்றும் விளம்பரம், தமிழ் வளர்ச்சித் துறை,

25ஆம் தேதி காலை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப்பணித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம், வனத்துறை, மாலை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, கைத்தறி, போக்குவரத்துத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,

26ஆம் தேதி காலை - திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, மாலை சுற்றுலாத் துறை, வணிக வரிகள், முத்திரைத்தாள்கள் மற்றும் பத்தி ரப்பதிவுத் துறை, இந்து சமய அறநிலையத் துறை,

27ஆம் தேதி காலை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல், மாலை கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறை,

28ஆம் தேதி காலை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, தகவல் தொழில்நுட்பவியல், தொழில் துறை, மாலை காவல், தீயணைப்பு,

29ஆம் தேதி காவல், தீயணைப்பு துறை மீதான விவாதத்துக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிலுரை அளிப்பார்.

மேலும் 29ஆம் தேதி அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற் றப்படும்.

இன்று தொடங்கும் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் 29ஆம் தேதி வரை நடை பெறுகின்றது.

வருகிற ஜூலை 10 அன்று நடைபெற உள்ள விக்கிரவாண்டி இடைத் தேர்தலை யொட்டி இந்தக் கூட்டத் தொடர் 9 நாட்கள் மட்டுமே நடத்தப்படுகிறது.

---

## சமூக நீதிக்கு எதிரான, குளறுபடிகள் நிறைந்த, ஒரு மோசடித் தேர்வான

# ‘நீட்’ தேர்வை ரத்துச் செய்ய மறுக்கும் பா.ஜ.க. அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணி சார்பில் வருகிற 24ஆம் தேதி நடைபெறுகிறது என அணியின் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜூன் 20 -

**நீட் தேர்வு என்பதே மோசடி தான் என் றும், ஆரம்பம் முதலே நீட் தேர்வை எதிர்த்த ஒரே இயக்கம் தி.மு.கழகம் தான் எனவும், சமூகநீதிக்கு எதிரான, குளறுபடிகள் நிறைந்த நீட் தேர்வை ரத்து செய்ய மறுக் கும் பாசிச பா.ஜ.க. அரசுக்கு கடும் கண்ட னங்கள் தெரிவிப்பதுடன் கழகத் தலைவரின் ஆணையேற்று தி.மு.க. மாணவர் அணி சார் பில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில், வரும் 24ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

நீட் தேர்வு என்பது ஏழை-எளிய மாண வர்களை தகுதி என்ற பெயரில் மருத்துவக் கல்வி பயிலவிடாமல் ஓரங்கட்ட பாசிச பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்ட தேர்வு. சமூகநீதிக்கு எதிரான தேர்வு முறை - சமத் துவம் இல்லாத தேர்வு முறை கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பை மறுக்கக் கூடிய தேர்வு முறை - அவர்களது கல்வி உரிமைக்கு தடை போடும் தேர்வு முறை அவர்களது மருத்துவக் கனவைச் சிதைத்து, “நீ டாக்டர் ஆக முடியாது” என் றும், “உனக்குத் தகுதியில்லை” என்றும் கூறி, தடுப்புச் சுவர் எழுப்புகிறது.

மேலும், நீட் தேர்வு என்பதே ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் படித்த மாணவர் களுக்கு சாதகமாகவும், வசதி படைத்தோ ருக்கும் மட்டுமே பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட தேர்வு முறை. ஆள் மாறாட்டம் செய்வது - வினாத் தாள்களை திருடுவது - விடைத்தாள்களை மாற்றி வைப்பது - மதிப்பெண்கள் வழங்குவதில் குளறுபிடிகள் என்று இத்தேர்வே முழுமை யான மோசடியாக உள்ளது. இதனை முன்பே அறிந்ததால் தான் தி.மு.க. நீட் தேர்வை ஆரம்பம் முதல் எதிர்த்து வருகிறது.

**‘நீட்’ தேர்வு அன்றே வினாத்தாள் கசிந்துள்ளது!**

இந்த ஆண்டு, இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வான நீட் தேர்வை தேசிய தேர்வு முகமை, கடந்த மே 5ஆம் தேதி நடத்தியது. நாடு முழுவதும் 4,750 மையங்களில் இந்த தேர்வு நடத்தப்பட்டது. இதில் 24 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதினர். இதன் முடிவுகள் ஜூன் 14ம் தேதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், ஜூன் 4ம் தேதியே முடிவுகள் வெளியாகின.

இந்த ஆண்டு நீட் தேர்வு நடைபெற்ற அன்றே வினாத்தாள் கசிந்ததாக பல்வேறு புகார்கள் எழுந்தன. இது ஒன்றும் புதி தல்ல. கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2020ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய் ததாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2021ஆம் ஆண்டு தேர்வில் 15 பேர் முறை கேடு செய்ததாக கைது செய்யப்பட்டார்கள்.

நீட் தேர்வு என்பது, இயற்பியல், வேதி யியல், தாவரவியல், விலங்கியல் என்று நான்கு பாடப்பிரிவுகளில் இருந்து 45 கேள்விகள் வீதம் 180 கேள்விகள் கேட்கப் படும். ஒவ்வொரு கேள்விக்கும் 4 மதிப் பெண்கள் வீதம் மொத்தம் 720 மதிப் பெண்கள் கிடைக்கும். ஒரு கேள்விக்கு தவறாக பதில் அளித்தால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். ஒரு கேள்விக்கு பதில் அளிக்காமல் விட்டிருந்தால் 716 மதிப்பெண் கள் கிடைக்கும். ஒரு கேள்விக்கு மட்டும் தவறாக பதில் அளித்திருந்தால் அவருக்கு 179 கேள்விகளுக்கான 716 மதிப்பெண் களில் ஒரு மதிப்பெண் குறைக்கப்பட்டு 715 மதிப்பெண்கள் பெறலாம். இப்படி இருக்க, சில மாணவர்கள் 719 மற்றும் 718 மதிப் பெண்ணும் பெற்றிருந்தனர். நீட் தேர்வு மதிப்பீட்டு முறைப்படி இந்த மதிப்பெண் களை எந்த மாணவரும் பெறவே முடியாது. எனவே இந்த தேர்வில், ஒருவர் பெறு வதற்கு சாத்தியமில்லாத மதிப்பெண்களை சில மாணவர்கள் பெற்றிருந்தது பலருக்கு சந்தேகத்தை எழுப்பியது.

**குளறுபடிகளின் உச்சம் ‘நீட்’ தேர்வு!**

இதற்கு முன்பு கடந்த 8 ஆண்டுகளில் மொத்தமாக 7 பேர் மட்டுமே முழு மதிப் பெண் பெற்ற நிலையில், இந்த ஆண்டு 67 மாணவர்கள் முழு மதிப்பெண்ணான 720 மதிப்பெண் பெற்றுள்ளனர். அதிலும், ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் உள்ள ஒரு மையத்தில் தேர்வு எழுதியவர்களில் 6 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ள னர். இதற்கெல்லாம் மேலாக 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் கூட, நீட் தேர்வில் 700க்கும் அதிகமான மதிப் பெண்களை பெற்றிருப்பது நீட் தேர்வு என் பது குளறுபிடிகளின் உச்சமாக இருப்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

இவ்வளவு மாணவர்கள் முதலிடம் பிடித்தது, எவ்வாறு சாத்தியமாகும் என் றால், வினாத்தாள் தேர்வுக்கு முன்பே வெளி வருவது, பணம் பெற்றுக் கொண்டு விடைகளை பகிர்வது, ஆள் மாறாட்டம் முறைகேடுகள் நடைபெற்றதற்கான ஆதா ரங்கள் இத்தேர்வு முறையே மோசடி என்று உறுதி செய்கிறது. மேலும், நீட் தேர் வில் முறைகேடுகள் நடந்தது உண்மை என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே குறிப்பிட்ட ஹரியானாவில் ஒரு தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய 6 மாணவர்கள், என்.சி.இ.ஆர்.டி.யின் முந் தைய பாடத் திட்டத்தில் விடை எழுதுவதா, புதிய பாடத்திட்டத்தில் விடை எழுதுவதா என்று சந்தேகம் ஏற்பட்டதால் அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்க முடிய வில்லை என கூறி, காலதாமதம் ஏற்பட்ட தாகவும், இழந்த நேரத்துக்காக, கருணை மதிப்பெண் வழங்கக் கோரி உச்சநீதிமன் றத்தில் வழக்கு தொடுத்தனர். உடனே, தேசிய தேர்வு முகமை தானாக முன்வந்து அந்த தேர்வு மையத்தையும் சேர்த்து

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

### அனைத்து மாநில தலைநகரங்களிலும்

## ‘நீட்’ மோசடிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

### காங்கிரஸ் கட்சி அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூன் 20 - ‘நீட்’ மோசடியை கண்டித்து நாளை நாடு தழுவிய அளவில் ஆர்ப் பாட்டம் நடைபெறும் என காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் அறிவி வித்துள்ளார்.

போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியினர் திரளாக கலந்து கொள் ளவும் அழைப்பு விடுத் துள்ளார்.

நீட் தேர்வில் வினாத் தாள் கசிவு, ஆள் மாறாட்டம் உள்ளிட்ட பல்வேறு முறைகேடு களும், மோசடிகளும் நடைபெற்றன.

இதனால், தகுதியில் லாதவர்கள் தேர்ச்சி பெற்று, தகுதியுடைய பலர் பாதிக்கப்பட்டனர். இதற்கு நாடு முழுவதும் கடும் கண்டனம் எழுந் துள்ளது.

அரசியல் கட்சியினர், மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் ‘நீட்’ தேர்வுக்கு எதிராக போராட்டங்களில் ஈடு பட்டு வருகின்றனர்.

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி உச்சநீதி மன்றத்திலும் வழக்கு கள் தொடரப்பட்டுள் ளன.

நீட் தேர்வு முறை கேட்டுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு ஒன்றை நேற்று விசா ரித்த உச்சநீதிமன்றம், ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக் கும் கடும் கண்டனம் தெரிவித்தது. முறை கேடு நடைபெற்றிருந் தால் ஒப்புக் கொள்ள வேண்டும் என அறிவு றுத்தியிருந்தது.

மேலும், இந்த விவ காரத்தில் இதுவரை எடுக் கப்பட்ட நடவடிக்கை கள் என்ன என்பது குறித்து அறிக்கை அளிக்க தேசிய தேர்வு முகமைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், நீட் மோசடியைக் கண்டித்து நாளை (21.6.2024) நாடு தழுவிய அளவில் ஆர்ப் பாட்டம் நடைபெறும் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து காங்கி ரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் வெளியிட்டுள்ள அறிக் கையில்,

நீட் தேர்வுக்கு எதி ராக அனைத்து மாநில தலைநகரங்களிலும் நாளை ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார். நீட் தேர்வுக்கு எதிராக நடை பெறும் ஆர்ப்பாட்டத் தில் காங்கிரஸ் கட்சி யினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.